திரு. ஜி. சுவாமிநாதன் : *தலைவரவர்களே, இந்த மின்சார இலாகா ஊழல் சம்பந்தமாக, நேற்றைய தினத்தில் நகரசபை கலைக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டது. அப்படியே நகரசபை கலைக்கப்பட்டு விடலாம் என்று தெரிகிறது. கலைக்கப்படுவதற்கு முன்பு இந்தத் தேர்தல் ஏப்ரலில் நடைபெறுவதாக இருந்தது. தற்போது கலைக்கப்பட்ட பிறகு ஏப்ரலிலேயே நடைபெறுமா அல்லது நீட்டித்துப் போகுமா என்று அறிய விரும்புகிறேன்.*

MR. CHAIRMAN : There is difference between the Corporation and Municipalities. The Hon. Minister answers with regard to the Corporation and not the Municipalities.

திரு. ஜி. சுவாமிநாதன் : *தலைவரவர்களே, நான் மாநகராட்சியைப் பற்றித் தான் கேட்கிறேன்.*

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : *அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்யப்படும்.*

திரு. ஜி. சுவாமிநாதன் : *தலைவரவர்களே, நவம்பரில் நடக்கவிருந்த தேர்தல் ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டது; தற்போது மாநகராட்சி கலைக்கப்பட்டு விட்டது; அதற்குப் பிறகும் தேர்தல் ஏப்ரலில் நடக்குமா என்பது என் கேள்வி. அது ஆராய்ச்சியில் இருக்கிறதா, அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : *தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் கலைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். கலைக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மசோதா வரும் போது இதுபற்றி விவரமாக, தெளிவாக அறிக்கை கொடுக்கப்படும்.*

Pallavan Transport Corporation

* 27 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Pallavan Transport Corporation has conducted an experiment on radial and feeder services in some parts of Madras City;

(*b*) if so, the routes in which such experiments were conducted; and

(*c*) the result thereof?

1973 நவம்பர் 21]

பல்லவன் போக்குவரத்துக் கழகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை மாநகரின் சில பகுதிகளில் நேர்த்தடப் பணிகளை (Radial Services) கிளைத்தடப் பணிகளை (Feeder Services) சோதனை அடிப்படையில் செயல்படுத்தி வருவது உண்மையா ?

(இ) ஆமெனில், எந்தெந்த வழித்தடங்களில் சோதனை அடிப்படையில் அப்பணிகள் நடத்தப்பட்டன ?

(உ) அவற்றால் ஏற்பட்ட பலன் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (இ) & (உ) பல்லவன் போக்குவரத்துக் கழகம், சைதாப்பேட்டை பகுதியில் நேர்த்தட முறை (Radial Routes) கிளைத்தட முறை (Feeder Routes) ஆகியவற்றைச் சோதனைஅடிப்படையில் நடத்திவருகிறது. மொத்தத்தில் வெற்றிகரமானதொரு திட்டமாகும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தச் சோதனைக்குப் பிறகு சென்னையிலுள்ள மற்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் அபிப்பிராயம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அது எப்போது முதல் விஸ்தரிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இத்தகைய வழித்தடங்களைச் சீர்படுத்துகிற முறையினை மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. படிப்படியாக அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

City Buses

* 28 *Q.*—THIRU R. SAKTHI MOHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have any proposal to increase the number of City buses in Madurai City; and

(*b*) if so, the details thereof ?